# வெளிநாட்டு வேலைவாய்ப்பால் ஏற்படும் சமூக மாற்றம் : ஒலுவில் பிரதேசத்தை மையப்படுத்திய விஷேட ஆய்வு

**முஹம்மத் ஹனீபா முஹம்மத் நைறூஸ்& அப்துர் றகுமான் அறூஸ்,**

*இஸ்லாமிய கற்கைகள் துறை, தென்கிழக்குப் பல்கலைக் கழகம்,ஒலுவில்,*
*தென்கிழக்குப் பல்கலைக் கழகம்,ஒலுவில்.*

**Keywords:** *வெளிநாட்டு வேலைவாய்ப்பு,பிரதேச வளங்கள், சமூக மாற்றம், தேசிய நலன்*

**அறிமுகம்**
வேலையின்மையினால் ஏற்படும் சமூக, பொருளாதார சிக்கல்களிலிருந்து விடுபடுவதனை நோக்காகக் கொண்டு பல திட்டங்கள் இன்று செயற்படுத்தப்படுகின்றன. இருந்தபோதிலும், வேலையற்றோர் தொகை நாளுக்குநாள் அதிகரித்துச் செல்கின்ற அதேவேளை,சர்வதேச இடப்பெயர்வும் அதிகரித்து வருகின்றது.இவ்விடப்பெயர்வு பல தருணங்களில் வேலைவாய்ப்பை மட்டும் நோக்கியதாக மாறிவருவதும்,இலங்கை போன்ற சிறிய வளர்ந்துவரும் நாடுகளில் அதிகதாக்கங்களை ஏற்படுத்தியுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும். 1977ஆம் ஆண்டின் பின்னரான திறந்த பொருளாதாரக் கொள்கையின் அமுலாக்கம் வேலையில்லாப் பிரச்சினையில் சிறிது மாற்றத்தைக் கொண்டு வந்துள்ளதுடன்,வெளிநாட்டு வேலைவாய்ப்பு அதிகரிப்பதற்கும் ஏதுவாகியுள்ளது. இதன் காரணமாக நாடு பூராகவும் இருந்து ஆண், பெண் இருபாலாரிலும் பலர் வேலை வாய்ப்புக்காக பல நாடுகளுக்கும் இடம்பெயர்ந்து வருகின்றனர்.இத்தொகை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றமையும்மறுக்கமுடியா நிதர்சனமாகும். இவ்வாறு வெளிநாடு செல்வோர் தொகையில் ஏற்பட்ட அதிகரிப்பு சமூகக்கட்டமைப்பிலும்பல மாறுதல்களை ஏற்படுத்தி வருகின்றமை அவதானிக்கத்தக்கதாகும். இவ்வகையில், இலங்கையின் தென்கிழக்குக் கரையில் அமைந்துள்ள ஒலுவில் பிரதேச மக்களின் சமூகக் கட்டமைப்பில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு எவ்வாறான மாறுதல்களை ஏற்படுத்தியுள்ளது என்பதனைஆராய்வதற்காக இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

ஒலுவில் பிரதேசமானது,அட்டாளைச்சேனை பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ள நடுத்தர மக்கள் வாழும் கிராமமாகும்.இக்கிராமத்தினைவளர்ச்சி அடைந்துவரும்கிராமம்என்ற கண்ணோக்கில் கணிப்பிட முடியும்.இப்பிரதேசத்தில் அமையப்பெற்றுள்ள தென்கிழக்குப் பல்கலைக் கழகம்மற்றும் ஒலுவில் துறைமுக நிர்மாணப்பணிகள் என்பன அண்மைக் காலமாக பல்வேறு தொழில்வாய்ப்புக்களை இப்பிரதேசத்தவர்களுக்கு வழங்கினும், அதிகமானவர்கள் வேலையற்றோர் எனும் வகைக்குள் உள்ளடக்கப்படுகின்றனர்.இங்குள்ள பட்டதாரிகள் சமூகம்,படித்து இடைவிலகியவர்கள் மற்றும் சாதாரண நிலைமைகளில் வாழும் பல்வகைச் சமூகக் கட்டமைப்பினர்என்போர் தொழில்பெற்றுக் கொள்வதில் பல இடர்பாடுகளை எதிர்நோக்கி வருகின்றனர்.இவ்வகையில் தொழிலற்றோரின்இறுதித்தெரிவாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு முன்னிலை பெறுகின்றது.இக்கிராமத்தில் அமையப்பெற்றுள்ள ஏழு கிராம சேவகர் பிரிவுகளிலும் வாழும் மக்களின் பொருளீட்டல் நடவடிக்கைகளில் மீன்பிடி, விவசாயம், சிறுகைத்தொழில், அரச உத்தியோகம், குடிசைக் கைத்தொழில் போன்றன காணப்படினும் வெளிநாட்டு வேலைவாய்பில் ஈடுபடுவோர் தொகை ஒப்பீட்டளவில் அதிகரித்த தன்மையைக் காட்டுகின்றது.

இப்பிரதேச வெளிநாட்டு வேலைவாய்ப்பு தொடர்பான ஆய்வறிக்கைகளை நோக்குகையில்ஒப்பீட்டளவில் பெண்களைவிட ஆண்களே அதிகரித்த தொகையினராக உள்ளனர்.இவ்வேலை வாய்ப்பு வசதிகளினூடாக இவர்கள் தங்களின் வாழ்க்கைத்தரம் பற்றி மாத்திரம் சிந்திப்பதுடன்நின்றுவிடுவதால், மாற்றீடாக வெளிநாட்டுவேலைவாய்ப்புக்களால் ஏற்படும் பாதகமான விளைவுகள் பற்றிகவனம் செலுத்தத் தவறுகின்றனர். இத்தொழில்வாய்ப்பு பொருளாதார ரீதியில் ஓரளவு எதிர்பார்த்த வளர்ச்சியைக் காட்டிய போதிலும்,இதனால் ஒலுவில் பிரதேசம் பெற்றுக்கொள்ளும் எதிர்விளைவுகள் இச்சமூகக் கட்டமைப்பில் எவ்வாறான மாற்றங்களை ஏற்படுத்துகின்றன என்பதைக் கண்டறியும் நோக்கில் இவ்வாய்வு முன்னெடுக்கப்படுகின்றது.

இந்தவகையில் இவ்வாய்வானது, இப்பிரதேச மக்களின் பொருளாதார நிலைகளை மதிப்பிடல்,வாழ்க்கைக் கட்டமைப்பில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஏற்படுத்தும் சாதகங்கள், பாதிப்புக்கள்என்பவற்றை வெளிக்கொணர்தல்,சமூக நிலைப்பாட்டைத்

தெரிந்துகொள்ளல், வளங்களை அடையாளப்படுத்தலும் உரிய முறையில் அவற்றைப் பயன்படுத்தலும்,இதுவரை ஏற்பட்டுள்ள பாதகமான மாற்றங்களுக்கு சாத்தியமான முன்மொழிவுகளை வழங்குதல்,மற்றும் இவ்வாறான ஆய்வுகள் சமூகத் தளத்தில் மேற்கொள்ளப்படுவதன் ஊடாக இச்சமூகவியல் கட்டமைப்பில் இஸ்லாமிய அடிப்படையில் மாற்றங்களை ஏற்படுத்த முனைதல் என்பனவற்றை முக்கிய இலக்குகளாக கொண்டுள்ளது.

இவ்வாய்வில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு இப்பிரதேசத்தில் ஏற்படுத்தியுள்ள தாக்கங்கள், சமூக அசைவுகள் மற்றும் வழங்கும் பங்களிப்புகள் என்பன முக்கிய பிரச்சினைகளாக இனங்காணப்பட்டு ஆராயப்பட்டுள்ளன.எண்ணக்கருக்களை விளங்கிக் கொள்ளல், வேலைவாய்ப்பைத் தூண்டிய காரணிகளை இனங்காணல்,விளைவுகளையும், பங்களிப்புகளையும் ஆராய்வதுடன், இச்சமூக மாற்றத்திற்கான காரணிகளில் வெளிநாட்டு வேலைவாய்ப்பின் பின்னணியை மதிப்பிடல் என்பன பின்புலமான ஆய்வுப் பிரச்சினைகளாகும்.

**ஆய்வு முறையில்**

ஆய்வு அறிமுகம் முன்னணியாகவும் அதனுடன் இணைந்த வகையில் ஏனைய ஆய்வு தொடர்பான கட்டமைப்புக்கள், அதாவது அரசியல், பொருளாதாரம், சமூகம், கல்வி, கலாசாரம் என்பவற்றை உள்ளடக்கியதாக இவ்வாய்வு நேர்த்தியாக்கப்பட்டுள்ளது. இந்த வகையில் பண்புசார் மற்றும் அளவுசார் முறைமைகளைப் பயன்படுத்திய விவரிப்பு ஆய்வாக இவ்வாய்வு அமையப்பெற்றுள்ளது. எனவே,இவ்வாய்வினை நேர்த்தியாக பூரணப்படுத்தும் வகையில் முதலாம் நிலைத் தரவுகளும், இரண்டாம் நிலைத் தரவுகளும் பயன்படுத்தப்பட்டுள்ளன. முதலாம் நிலைத் தரவுகளை பெற்றுக்கொள்வதற்காக நேர்காணல்,வினாக்கொத்து முறைமை, அவதானிப்புஎன்பன பயன்படுத்தப்பட்டுதேவையான தகவல்கள் சேகரிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக,வினாக்கொத்து அண்ணளவாக எடுமான அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்ட சுமார் 100 பேரிடம் வழங்கப்பட்டு ஆய்வுக்குத் தேவையான தகவல்கள் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.அத்துடன்,தேர்ந்தெடுக்கப்பட்ட ஆய்வுத் தலைப்போடு தொடர்பான 16 நபர்களுடன் இடம்பெற்றநேர்காணல் ஊடாகவும் ஆய்வுக்குத் தேவையான தகவல்கள் சேகரிக்கப்பட்டுள்ளன.

மேலும், இரண்டாம் நிலைத் தரவுகளாக,ஏற்கனவே வெளியிடப்பட்ட ஆய்வுகளின் உட்பரிமாணங்கள்,சஞ்சிகைகள், பிரதேச செயலாளர் பிரிவு காரியாலய அறிக்கைகள், பாடசாலைக் குறிகாட்டிகள்,நிரைத் தரவுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பன பெறப்பட்டு இவ்வாய்வு வெற்றிகரமாக பூர்த்திசெய்யப்பட்டுள்ளது.

**சுருக்கமும் முடிவுரையும்**

ஒலுவில் பிரதேசம் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களுக்கான ஆண், பெண் இடப்பெயர்வுகளினுடாகபொருளாதார ரீதியான சில அனுகூலங்களை அடைந்திருப்பினும்கூட சமூக ரீதியில் பல பாதகமான எதிர்விளைவுகளை அடையப்பெற்றுள்ளமை இவ்வாய்வின் ஊடாக கண்டறியப்பட்ட உண்மையாகும். இந்தவகையில்,ஆய்வுப் பிரதேச களநிலைகளை கவனத்தில் கொண்டு மேற்கொள்ளப்பட்ட இவ்வாய்வு பின்வரும் சாத்தியமான விதந்துரைப்புகளை முன்வைக்க முனைகின்றது.பிரதேச அறிமுகம்,சமூகத்தில் காணப்படும் தொழில் பற்றிய தப்பபிப்பிராயங்களை நீக்குதல்,வெளிநாட்டு வேலைவாய்ப்பை மாத்திரம் நம்பிவாழும் மக்களின் பொருளாதார நிலைமைகளுக்கான மாற்றீடுகளை பரிந்துரை செய்தல்,இவ்வேலைவாய்ப்பினால் ஏற்படும் சமூக மாற்றங்களை தெளிவுபடுத்துதல்,இப்பிரதேசத்தில் உள்ள வளங்கள் தொடர்பான மதிப்பீட்டை பெற்றுக்கொண்டு அதனூடாகஅடையாளங் காணப்பட்ட தொழில் வகைகளை முறையான வகையில் ஏற்படுத்த முனைதல்,பெற்றுக்கொள்ளும் அடைவுகளை மக்கள் மயப்படுத்தல்,வேலைவாய்ப்பின் சுயதொழில் ஊக்குவிப்புகளுக்கு அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவிகளைப் பெற்றுக்கொண்டு இப்பிரதேச மனித மற்றும் ஏனைய மூலவளங்களின் மூலம் உச்சபயனைப் பெற்றுக்கொள்வது, இஸ்லாம் அறிமுகப்படுத்தியுள்ள 'ஸகாத்'பங்கீட்டை ஊக்குவித்து,அதனூடாக தொழில்வாய்ப்பு முயற்சிகளை ஏற்படுத்த முனைதல்,மேலும் இதன் மூலம் பயன்பெறும் மனித வளங்களை நாட்டின் தேசிய நலனில் பங்குகொள்ளச் செய்வது என்பனஇவ்வாய்வின் பிரதான அடைவுகளாகும்.

**References**


Coastal Resource profile(2009),Divisional Secretariat, Addalachenai

Department of Census and Statistics, Ministry of Plan Implementation.

Grete Brochman, (1993), Middle East Avenue: Female from Sri Lanka to the Gulf, Westivew Press Publication.

Justina Paul, (2011), International Business (fifth Edition), PHI Learning (PVT), New Delhi, India.

Ramani Gunathilaka, Markus Mayer, Milan Vodopivec, (2011), The Challenge of Youth Employment in Sri Lanka, The World Bank Publications, Washington, USA.